கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் துவங்குவதற்கு அவர்கள் குடியிருக்கிற இடத்திற்கு ஏற்றாற்போல பணம் பெற்றுக்கொள்ள உத்தரவிடுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதியிலே குடியிருக்கிற அந்த மக்கள், அந்தக் குடிசைப் பகுதியிலே உள்ள அந்த வீட்டு மனையினுடைய மனை அளவு, குறிப்பிட்ட ஒரு சதவீதத் தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். மீதத் தொகை, மேம்பாட்டுத் தொகையில் தவணை முறையிலே செலுத்தப்பட வேண்டும். அந்தப் பகுதியினுடைய குறைபாடுகளை விரைவிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம்.

* 5408. திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு தற்பொழுது இயங்கிவரும் கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் சிதம்பரம் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் துவக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

10.05 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன? அந்தச் சங்கங்களிலே அங்கம் வகிக்கக் கூடிய அங்கத்தினர்கள் எத்தனை பேர்? அதற்குத் தனியாக இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்களே அதற்கு என்ன காரணம் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்கனவே திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் பகுதியை உள்ளடக்கியதாக முதலிலே அந்த அலுவலகம் தொடங்கப்பட்டது. நிர்வாகத்திற்கு ஏற்றாற்போல் அந்தச் சங்கங்களை கண்காணிப்பதற்குரிய பணிகளை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளியும் புதுக்கோட்டையும் சேர்த்து தனியாக ஒரு உதவி இயக்குநர் அலுவலகமும் அதுபோல தென்னாற்காடு மாவட்டமும் தஞ்சாவூர் பகுதியும் சேர்த்து சிதம்பரம் பகுதியில் ஒரு அலுவலகமும் இன்றைய தினம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தென்னாற்காட்டைப் பொறுத்தவரையில் 74 நெசவாளர்ச் சங்கங்கள் மட்டுமே இருக்கின்றன. தஞ்சாவூரைப் பொறுத்த வரையில் 47 நெசவாளர்ச் சங்கங்களே இருக்கின்றன. ஆகவே இவ்வளவு சிறிய நெசவாளர்ச் சங்கங்கள் இருக்கின்ற காரணத்தால், தனியாக அலுவலகம் பிரிக்கின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக சங்கங்களின் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை எத்தனை? தஞ்சை மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாகும். இப்போது கூட நிர்வாக வசதிக்காக காவல் துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறைகளில் 2 ஆகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடந்து வருகிறது. அதையும் கவனத்தில் கொண்டு மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்கள் நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டத்தை தனியாகப் பிரித்து கைத்தறி மற்றும் துணி நூல் அலுவலகம் அமைக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச .தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்கள் விவரம் மாவட்ட வாரியாக உள்ள குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 47 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களே இருக்கின்றன. ஆகவே தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்கின்ற திட்டம் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]